# திறவுகோல்

2052 ஐப்பசி
மாத இதழ்



வெளியீடு
மன்னையின் மைந்தர்கள் அமைப்பு

மண்ணின் மாற்றத்தை நோக்கி

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் குழு ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு, இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. தற்பொழுது அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படை வசதிகளை சரி செய்து கொண்டு வருகிறார்கள்.

நோக்கம்

மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு சேல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

# அரசு உதவிபெறும் பள்ளிகளைப் புறக்கணித்தல் தகுமோ?

மாநிலத்தின் கல்வி வளர்ச்சியில் அரசு உதவி பெறும் பள்ளிகள்.

அரசுப் பள்ளிகள் ஏற்றம் பெறுவது காலத்தின் கட்டாயம். மருத்துவம், பொறியியல், வேளாண்மை என அனைத்து தொழிற்கல்வியிலும் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 7.5% இட ஒதுக்கீடு வழங்கி சட்டம் நிறைவேற்றப்பட்டது வரவேற்கக் கூடியது. ஆனால் அரசு உதவி பெறும் பள்ளிகளை புறக்கணித்தல் தகுமோ? கடந்த ஆட்சியில் அமைக்கப்பட்ட நீதிபதி கலையரசன் குழு அறிக்கையில் மருத்துவ படிப்புகளுக்கு அரசு பள்ளி மற்றும் அரசு உதவி பெறும் பள்ளி மாணவர்களுக்கு 10% இட ஒதுக்கீடு அளிக்க வேண்டும் என பரிந்துரைக்கப்பட்டது.

கல்வித்துறை சார்பில் வழங்கப்படுகிற இலவச நீட் பயிற்சி அரசு பள்ளி மற்றும் அரசு உதவி பெறும் மாணவர்களையும் உள்ளடக்கி இருந்தது. ஆனால் சட்டமன்றத்தில் சட்டம் நிறைவேறும் போது 7.5% இட ஒதுக்கீடு அரசுப் பள்ளி மாணவர்களுக்கு மட்டும் வழங்கப்பட்டது. புதிய அரசு பதவியேற்றவுடன் தில்லி உயர்நீதிமன்ற ஓய்வு பெற்ற தலைமை நீதிபதி முருகேசன் தலைமையில் குழு அமைக்கப்பட்டது.

மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், கல்வியாளர்கள் என எல்லோரிடமும் கருத்து கேட்கப்பட்டு விரைந்து அறிக்கை பெறப்பட்டது. அதன் விளைவாக நடப்பு சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே அனைத்து தொழிற் படிப்புகளுக்கும் அரசு பள்ளி மாணவர்களுக்கு 7.5% இட ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் அரசு உதவி பெறும் பள்ளிகளை பற்றிய புரிதல் அவசியமானது.

நாட்டில் வேறெங்கும் பள்ளிகள் தோன்றுவதற்கு முன்னரே தமிழ்நாட்டில் பள்ளிகள் உருவாகியிருந்தன. சென்னையில் 1715-ல் முறையான பள்ளிக் கல்வியை கற்பிக்க தொடங்கப்பட்ட செயின்ட் ஜார்ஜ் பள்ளி உலகின் பழமையான பள்ளிகளில் ஒன்று. தொடர்ந்து 1762-ல் திருச்சியில் பிஷப் ஹீபர் மேல்நிலைப்பள்ளியும்,1819-ல் நாகர்கோவிலில் ஸ்காட் கிறிஸ்டியன் பள்ளியும் தொடங்கப்பட்டன.

இப்பள்ளிகள் தான் பொதுப் பள்ளிகளுக்கான முன்னோடி. ஆங்கிலேயர் ஆட்சியில் 1871-ல் உள்ளாட்சி அமைப்புகள் மூலம் பள்ளிகளை தொடங்குவதற்கும் அதற்கான

மானியத்தை அரசிடமிருந்து பெறுவதற்கும் வழிவகை செய்யப்பட்டது. பெரும்பாலும் கிறிஸ்தவ மிஷினரிகள் முதலில் பள்ளிகளைத் தொடங்கினர். விடுதலை போராட்ட காலத்தில் தேசிய உணர்வின் காரணமாக கிந்துக்களும், முசுலிம்களும், ஊரில் உள்ள பெரியவர்களும் பள்ளிகளைத் தொடங்கினர்.

அரசின் மிக முக்கிய கடமையான கல்வியை பல ஆண்டுகளாக தாமாக முன்வந்து வழங்கியமைக்காகவும் தனது நிலத்தையும் உடைமைகளையும் பொது கல்விக்காக அர்ப்பணித்தமைக்காகவும் அரசு நிதி உதவி இப்பள்ளிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. தமிழகத்தில் அரசு, அரசு உதவிபெறும் பள்ளிகள் மட்டும் 49630. இதில் மேல்நிலை கல்வி அளிக்கும் 3054 பள்ளிகளில் 1218 பள்ளிகள் அரசு உதவி பெறும் பள்ளிகள் ஆகும். இன்றளவும் மேல்நிலை பொதுத்தேர்வு எழுதும் மாணவர்களின் 38% பேர் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயில்கின்றனர். 1990களில் தொடங்கப்பட்ட தனியார் மெட்ரிக் பள்ளிகளுக்கு முன்னர் அரசு உதவி பெறும் பள்ளிகளே மாநிலத்தின் கல்வி வளர்ச்சிக்கு அடையாளமாய் இருந்தது. இன்றளவும் பல பள்ளிகள் 100 ஆண்டுகளை கடந்து ஊரின் அடையாளங்களாய் விளங்கி வருகின்றன.

1980 களுக்கு முன்னர் கல்லூரிகளில் அடி எடுத்து வைத்த பெரும்பாலானோர் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயின்றவர்கள் தான். ஆயிரத்துக்கும் மேற்பட்ட தனியார் மேல்நிலைப் பள்ளிகள் இருந்தாலும் வசதி படைத்தவர்களால் மட்டுமே அங்கே கல்வி பெற முடியும் என்கிற சூழ்நிலை நிலவுகிறது. ஆனால் அரசு பள்ளிகளை போலவே உதவிபெறும் பள்ளிகளையும் ஏழை, எளிய, சாதாரண மாணவர்கள் நாடுகின்றனர்.

இதற்கு காரணம் அரசு பள்ளி மாணவர்களுக்கு கிடைக்கும் அனைத்து வகை கல்வி உதவித்தொகை, இலவச பஸ் பாஸ், விலையில்லா நலத்திட்டங்களான புத்தகங்கள், புத்தகப்பை, மதிய உணவு, மிதிவண்டி, காலணி, மடிக்கணினி, மாணவிகளுக்கான நாப்கின், அரசு விடுதிகளில் தங்கும் வசதி என அனைத்து சலுகைகளும் இங்கேயும் கிடைப்பது தான்.

மேலும் பதவி உயர்வு, பணி மாறுதல் என அரசுப் பள்ளி ஆசிரியர்கள் வேறு பள்ளிகளுக்கு சென்று விடும் நிலையில் ஒவ்வொரு பணித் தொகுதியிலும், பாடத்திலும் அதிக ஆண்டுகள் பணி அனுபவம் பெற்றவர்கள் அரசு உதவி பெறும் பள்ளி ஆசிரியர்ளே. இப்பள்ளிகளின் ஆசிரியர்களில் பலர் புதிய பாடத்திட்ட வடிவமைப்பிலும், நீட் பயிற்சியிலும் கருத்தாளர்களாக பணிபுரிந்து வருகின்றனர்.

கடந்த மூன்று ஆண்டுகளாக தமிழக அரசு வழங்கும் இலவச நீட் பயிற்சி

இம்மாணவர்களையும் உள்ளடக்கி இருந்த நிலையில் தொழிற்கல்வியில் 7.5 சதவீதம் இட ஒதுக்கீட்டில் மட்டும் அரசு உதவி பெறும் பள்ளிகளை புறக்கணித்து தகுமோ? இட ஒதுக்கீட்டால் 363 அரசு பள்ளி மாணவர்களின் மருத்துவக் கனவு கடந்தாண்டில் நிறைவேறியது. தனியார் நிர்வாகத்தின் கீழ் செயல்பட்டாலும் அனைத்து வகையிலும் கல்வித் துறையின் நேரடி கட்டுப்பாட்டில் தான் இவ்வகைப் பள்ளிகள் இயங்கி வருகின்றன.

மேலும் ஏழை, எளிய பின்தங்கிய மாணவர்களின் கல்லூரி கனவை நனவாக்கும் வகையில் அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கும் இட ஒதுக்கீட்டை நீட்டிக்கவும் அல்லது 2.5% தனியாக இட ஒதுக்கீடு வழங்கவும் அரசு முன்வர வேண்டும். இவ்வாறு அரசு முடிவெடுத்தால் பள்ளிக்கல்வியிலும் உயர் கல்வியிலும் பொருளாதார சமத்துவம் நிலைத்திட வழிபிறக்கும்.

–

எஸ். அன்பரசு,
முதுகலை பட்டதாரி ஆசிரியர்,
தொடர்புக்கு: anbuhereforu@gmail.com

---

அட்டைப்பட
ஓவியம்:

**இரா.மதுவர்ஷினி,**

சரஸ்வதி வித்யாலயா பள்ளி,
பெருவிடைமருதூர்.



## 1.வரிசையாக அமர்ந்திருக்கும்

விருந்தினர்களைக் கவனித்து
பெண்கள் அனைவருக்கும்
சில முழம் பூக்களைத்
துண்டாக்கித் தருகிறாள்
சுமங்கலி ஒருத்தி
வரிசையின்
இடையில் பட்ட
விதவை ஒருத்தியின்
கைகளையும் மனதையும்
துண்டாடிவிட்டுத்
தாண்டிச்சென்றுகொண்டே சிரிக்கிறது
சுமங்கலி தந்து செல்லும்
துண்டு முழம் பூ.

2.நல்ல பிராண்ட் சார்ட்
நல்ல பிராண்ட் செல்
நல்ல பிராண்ட் வாட்ச்
நல்ல ஓட்டல்
நல்ல உணவு
நல்ல வீடு
நல்ல கம்பெனி வண்டி
பிள்ளைகளுக்கு நல்ல ஸ்கூல்
இதற்கு மேல் ஒரு சிலர்
பிராண்டட் கார்
இப்படி நல்ல நல்ல பட்டியலோடு
வாழ்வு நடத்தும் மனிதர்கள்
ஒரு நாளும்
நல்ல விவசாயத்தை
விரும்பாதது
கவலை கொள்ளவே செய்கிறது
நல்ல விவசாயம் என்று
தேடும்பொழுது
விவசாயியைச் சந்திப்பீர்கள்
இந்த சந்திப்பு
ஒவ்வொரு விவசாயியையும்
பிராண்டட் விவசாயியாக மாற்றிவிடும்
என்று
ஏதோ சொல்கிறது மனது
அவன் அவள் கைப்பட்டு வீழ்ந்த
விதையெல்லாம் நமக்கு
நிபந்தனையற்ற வயல் வாசம்
அவனுக்கும்
அவளுக்கும்
இப்பொழுது சொல்லுங்கள்
நம் விவசாயிகள் யாரென்று.

## 3.வாக்காளே பெருமக்களே என்றார்கள்

வீதி வீதியாய் நாங்கள் இருக்கிறோம்
என்றார்கள்
விளக்கெரியும் என்றார் ஒருவர்
சாலையில் தார் ஊற்றப்படும் என்றார்
ஒருவர்
சுத்தமான தண்ணீருக்கு உத்தரவாதம்
என்றார் மற்றொருவர்
ஓட்டுக்குப் பணம் என்றார்
காலில் வீழ்ந்தார்கள்
காலைவாரி விட்டார்கள்
ஒவ்வொரு ஐந்தாண்டும்
நானே ஆளவேண்டும் என்று
திரண்டார்கள்
மருத்துவம் கைகூட வில்லை
கல்வி விலையேறிப்போனது
சந்தையில் பெட்ரோல் விலை
எகிறிப்போச்சு
எண்ணெய் விலை பிரச்சனைகள்
ஏழைகளுக்கு
நியாயவிலைக்கடையில் பொருளே

இல்லை
வந்தாலும் தரமில்லை
வீதியில் அளித்த வாக்குறுதிகளும்
மறந்து போயாயிற்று
வாக்குறுதி அளித்த சொற்களை
மீண்டும்
வெள்ளை காக்கை பொறுக்கிப்
போயாயிற்று
வாக்களித்த விரல்கள் எல்லாம்
கன்னத்தில் கைவைத்து கவலை
கொண்டாயிற்று
வாழ்க்கை கப்பல் தடம் புரண்டு
தத்தளித்தாயிற்று
வாழ்வைத் தள்ளிவிட ஆள் தேட
ஆரம்பித்தாயிற்று
அதற்குள் ஐந்தாண்டு முடிந்தாயிற்று
மீண்டும் வாக்காள பெருமக்களே
என்கிற குரல் ஒலித்து ஓய்ந்தாயிற்று.

## 4. அந்திரத்தில் பறந்த

திசை அறியாத
பறவையொன்று
மண் பார்த்து
மரம் பார்த்து
கீழ் இறங்கியாயிற்று
கிட் கிட் இறகசைவில்
இளைப்பாறியது மரம்
கீச் கீச் அலகு இசையில்
மேகம் தொட்டு
புன்னகைத்தது கிளை
மர நிழலில்
ஒரு பறவையின் காணல்
என்னை இளைப்பாறி
பறக்கச்செய்தது.

## 5. அவ்வப்பொழுது

கரைகளில்
மணல் வீடு கட்டி
விளையாடிச் செல்கிறது
குழந்தை
அந்த மணல்
வீட்டிற்குள் நுழைய
இன்று வரை
கடலை அழைத்து
வருகிறது அலை.

## 6. கருமேகங்களைக் காட்டி

மழையை வரைந்துவிட்டேன்
சூரியனைக் காட்டி
வெப்பத்தை
வரைய முடியவில்லை
என்னால்
பறவையைக் காட்டி
இறகினை வரைந்துவிட்டேன்
இறகினை காட்டி
பறத்தலையும் வரைந்துவிட்டேன்
காற்றை வரைய முடியவில்லை
என்னால்
கடலைக்காட்டி
நீரை வரைந்துவிட்டேன்
கடலின் சுவையை
வரையமுடியவில்லை
என்னால்
ஈரத்தை வரைய
நம்மால் முடியும்
என முயற்சி செய்து
கொண்டிருக்கிறேன்.

## 7. நேசம்

கரடி பொம்மையை
அணைத்துக் கொண்டே தூங்கும்
குழந்தைக்கு

முத்தமிட்டாள் அம்மா
தூக்கத்தில்
கரடி பொம்மையை
முத்தமிட்டது குழந்தை
முத்தமிட்டவாறே
குழந்தை சொல்லியது
நீ என் கூட
விளையாடு டெடி
நான் உனக்கு
அம்மா என்றது !
கரடி பொம்மையை
நகர்த்திவிட்டு
குழந்தையின் மீது
தன் கைகளால்
அணைத்தவாறே
கண்ணீரோடு முத்தமிட்டாள்
அம்மா.

## 8. விருந்தினர்கள்

இங்கு வருகையில்
அவர்கள் கூடவே
அவர்கள் ஊரையும்
அழைத்துவந்துவிட்டார்கள்
ஆம்
அவர்கள் வசிக்கும் தெருவைப்பற்றிய
கதைகள்
இன்று பெய்த மழையைப் பற்றிய
கதைகள்
அவர்கள் செல்லும்
கோவிலைப்பற்றிய கதைகள்
அவர்கள் சார்ந்த வயல்வெளிகளின்
குரல்கள்
சில மனிதர்களைப் பற்றிய கதைகள்
என அவர்கள் ஊரையே
கொண்டுவந்தார்கள் இங்கு
இங்கிருந்து
அவர்கள் மட்டும் புறப்பட்டார்கள்.

## 9. தன் கூட்டத்திலிருந்து

உதிரும் ஓர் பூவுக்காக
மலர்ந்து மலர்ந்து
அஞ்சலி செய்து கொண்டே
இருக்கிறது
காம்பு கழன்று
அந்தரத்திலிருந்து நழுவி வரும்
மற்றுமொரு பூ

## 10. யாரோ சொல்லி

வீட்டுக்கு எதிரே
நிலைக்கண்ணாடி வைத்தான்
மணி பிளான்டை வைத்தான்
சில நாட்கள் கழித்து
கண்ணார் கழியும் என்று
திருஷ்டி தேங்காயும் வைத்தாயிற்று
திருஷ்டி பொம்மையும் வைத்தாயிற்று
போதாததற்கு கையில்
இடுப்பில் தாயத்து ஒன்றும்
கட்டியாயிற்று
கை விரல்களில் பல நிற
மோதிரங்களையும் அணிந்தாயிற்று
வலது புற பாதத்திற்கு மேல்
கருப்பு கயிறு கட்டியாயிற்று
இப்படி ஏதேதோ வைத்தும்
கட்டியும்
எந்த குறையும்
நிவர்த்தி ஆகாததைக் கண்டு
ஜோதிடம் பார்த்து நம்பிக்கையோடு
காத்திருந்தான்
எந்த காலத்திலும் மாற்றம் இல்லாமல்
நாட்கள் கடந்தது
வாழ்வும் நகர்ந்தது
வறுமையில் திரிந்த
அவனது வாழ்வு
இறுதியாக எழுதியது

வாழ்வது கலை
வாழ்வில் தோற்பது இன்னொரு
வாழ்வு அவ்வளவுதான்
இந்த சிக்காலான புதிரை விடுவிக்க
பழக்கப்படவில்லை உடல் என்று
எழுதியது வாழ்வு
மீண்டும் யாரோ சொன்னார்கள் என்று
வீட்டையே இடித்தான்
புதுவீடு கட்டாமல்
வெளியே பறந்தான்.

## 11. அறைக்குள்

ஒரு பறவையை
வரையச் சொன்னீர்கள்
எனக்குப்பிடித்திருந்தது
உங்களால்
ஒரு மரத்தை வரைந்தேன்
அதுவும் பிடித்திருந்தது
புரியாத பிரபஞ்சத்தைக் கறுப்பு நிற
தூரிகையால் வரைந்து ரசித்தேன்
நீங்களும் ரசித்தீர்கள்
வரைந்தவற்றுக்கு உயிர்கொடுக்க
வெளியே விட வேண்டாமா நீங்கள்
நீங்களும் வெளியே வரவே
வரைந்து வரைந்து
களைத்துப்போனேன்
ஒரு பூ மலர்ந்தும் உங்கள் விரல்
படவில்லை அதன்மேல்
வெளிவந்து
பிரபஞ்ச வெளியில்
ஓர் பறவையைக் காணல்
காற்றோடு
ஓர் மரத்தைக் காணல்
மலர்ந்து விரியும் கண்களால்
ஓர் பூவைக்காணல்
மேல் நோக்கி நிலவையும்
நட்சத்திரங்களையும் காணல்
என இருக்க வேண்டாமா
இவையெல்லாம் இல்லாமல்
தீர்ந்துவிடுமா என்ன நம் வாழ்வு.

## 12. பாறை அருவமான கதை

வான் நோக்கிக் குவிந்த
பாறையொன்று
கைப்பட்டு நகர்ந்து எழுந்தது
அடிக்கடி அமரும் பாறையும்
அசைந்தது
விரல் தேய்ந்தும் பாத சுவடு
பதியாத பாறையொன்று
சிரித்தது
தேசாந்திரியாகப் பயணம் செய்தது
பலிபீடம் கண்டது தூரத்துப்
பாறையொன்று
ரத்தம் சிந்தாத உருவம் பெற்று
குளித்து அமர்ந்து
உணவைத் தொடாமல்
வியர்த்தது
கண் திறந்து ஆடையணிந்தது
அசையாத பாறையொன்று
இன்னும் உளி வலி தீராத
ஏக்கத்தோடு
மனிதர்களைப் பார்த்து
மனதில் அமர்ந்து
வீடு வந்தது அந்தப்பாறை
அது பாறை அல்ல இப்பொழுது.

–

ப. தனஞ்ஜெயன்
danadjeane1979@gmail.com
9751800333



# காதலியின் கோவம், காதலனின் சமாதானம்.

சாலையோரம் நான் நடக்க
வெட்கப்பட்டு நீ சிரிக்க
உன் இதலோர சிரிப்பில் என்னை சிறைபிடித்தாயே.

உன் பாதம் பட்ட இடத்தில்
பணி மலராய் மலர்கிறேனடி
நீ வெக்க பட்டு சிரித்த மறுநொடி
என் கால்கள் இரண்டும் உன்னை பின் தொடருதடி.




கவிதை மற்றும்
ஓவியம்

**CM. சிவா,**
வடுவூர்.

**அந்தரத்தில் தொங்கும்**
கூட்டின் நம்பிக்கை
உன் மீதான காதல்.

***

**என் பிரியங்களை**
மலர்களாக்க நினைக்கிறேன்.
வசந்தங்களை ஏன்
ஒளித்து வைக்கிறாய் ?

***

**உன் மௌனம்**
எனக்கான இசைமேடை.
அதில் ஆலாபனை செய்கிறது
வாழ்வு.

***

**என் காதலின் அறியாமை
தான்**
உன்னிடம் இருந்து
என்னைக் காப்பாற்றுகிறது.

***

**மெய்யில் இருந்து பெறும்**
ஆன்ம விடுதலை...
உன்னில் தஞ்சம் அடைவது.

***

**உன் ஞாபகங்கள்
அறையும்போது**
என்னை
சிலுவையில் ஏந்திக்கொள்கிறது
காதல்.

***

**உனக்கான என்
வெளிச்சத்தை**
இருட்டில் வைக்கிறாய்.
அதனைப் பிரகாசமான
இரவாக்குகிறது
வானம்.

***

**என் நிலத்துக்கு
நீராகிறாய்**
என்ன அதிசயம் !
வேர் கூடப் பூக்கிறது.

–

**தி. கலையரசி**

# காத்திருக்கும் கண்கள்

கழுத்து குனிந்த கிழவிக்கு
ஆட்டு நடை தான்
அவள் புடவையில் எப்போதும்
கிடை வாசம்

அவள் மொழிக்கு ஆடு சிரிக்கிறது
ஆடுகளின் ம்மேவுக்கு
அவள் காதுகள் அசைகின்றது

இடது வலது விலகினாலும்
இறுதியில் கிழவிக்கு முன் நடக்கும்
ஆட்டு வரிசை நகரும் ஓவியம்

முகம் சுருங்கி ஆட்டுத் தோலென
முதிர்ந்த கிழவிக்கு
பின்னால் வரும் எனக்கு
நேரம் ஆனாலும் பரவாயில்லை

ஒலி எழுப்பி மந்தை களைக்க
விரும்பவில்லை

வழி தப்ப காத்திருக்கும்
ஒரு ஜோடி கண்கள்
கிழவியிடமும் இருக்கிறது.......!

–

- கவிஜி

# உறங்கும் முன் உறங்குவது யார்?

## (அறிவியல் ஆய்வுக் கட்டுரை)


நேசமுடன் ஈசு

உறக்கத்தை பற்றி உறங்காமல் ஆய்வு செய்தபோது விழித்துக் கொண்டது இந்த கட்டுரை.

உறக்கம் இன்று மிக முக்கியம் இன்றைய வளர்ச்சி நல்லதா? கெட்டதா? என்ற தராசில் தூக்கமே முள்ளாக இருக்கின்றது. தூக்கம் கெட்டால் வரும் பாதிப்புகள் பல அதில் மருத்துவர்கள் குறிப்பிடுவது என்னவெனில் தூக்கம் கெடும் போது உடலில் ஒட்டுமொத்த நோய்களுக்கும் அது பிள்ளையார் சுழி போட்டு தொடங்கி வைக்கிறது என்கிறார்கள். ஏன் தூக்கம் கெடுகிறது? இன்றைய வளர்ச்சியின் உச்சத்தில் நாம் நிறைய தொழில்நுட்பங்களைத் ஒட்டி இருந்தாலும் விட்டிருப்பதென்னவோ நமது ஆரோக்கியத்தை தான்.

நோய்கள் ஏன் ஏற்படுகிறது? என்பது பற்றிய மருத்துவர்களின் கூற்றுக்களில் தொலைக்காட்சியைப் பார்ப்பது, தொலைபேசியை இரவு நெடுநேரம் பயன்படுத்துவது, அதிலும் குறிப்பாக WhatsApp, Facebook, Share Chat, திரைப்படம், மற்றும் Chating என்கின்ற உரையாடல்கள் இவை மூலம் நம்மை அறியாமலே நாம் அதில் ஆழ்ந்து போகும் பொழுது கண்களுக்கு பாதிப்பு உண்டாகி அது நம் மன நிலையில் மாற்றங்களை உண்டாக்கி தூக்கத்தை கெடுத்து விடுகிறது.

ஆரோக்கியத்தின் அடிப்படை என்பது என்னவென்றால் தூக்கம்தான். நம் உடலில் ரசாயண மாற்றங்கள் அறிவியல்பூர்வமாக எப்பொழுது நிகழ்கிறது எனில் இரவில் உறங்கும் பொழுது தான் நடக்கின்றது. அடிப்படையில் நாம் பகலில் வேலை செய்பவர்களாகவும் இரவில் உறங்குபவர்களாகுமே இருந்தோம். நமது உடலின் அமைப்புகளும் அவ்வாறே படைக்கப்பட்டிருக்கிறது என்று சிறப்பு மருத்துவ ஆலோசகர்கள் கூறுகிறார்கள். ஏன் இரவு தூங்க வேண்டும் அதை ஏன் பகலில் செய்யக் கூடாது என்றால் பகலில் இருக்கின்ற வெளிச்சங்களும் நமது உடலில் ஏற்படுகின்ற மாற்றங்களும் இயற்கையாக இரவின் தன்மைகேற்பவே அமையப்பட்டுள்ளன. விலங்குகள் இரவில் விழித்து பகலில் உறங்குதல் அசைவ உணவுகளை கிழித்து உண்பதற்கான பற்கள், கண்கள், கால்கள், இயற்கையாக அமைக்கப்பட்டு இருப்பது போல மனிதர்களின் உடலும் இயற்கையாக இரவில் உறங்கி அதன் மூலமாக மாற்றங்களைப் பெற்று ஆரோக்கியத்துடன் வாழ வழி வகை செய்யப்பட்டிருக்கிறது.

இப்பொழுது இந்த கட்டுரையில் உறங்கும் முன் உறங்குவது யார்? என்பது பற்றி சிந்திப்போம். உறங்குவது என்பது சில படிநிலைகளைக் கொண்டதாக இருக்கிறது. அவற்றை பெரும்பாலும் பலரும் அறிந்திருக்க வாய்ப்பில்லை. அதை அறிவிக்கவே இந்த கட்டுரை. கொரோனா முதல் அலையின் காலகட்டத்தில் காவலர்களை மிகவும் சிந்திக்க வைத்து வைரலான ஒரு புகைப்படம் காவலர் ஒருவர் உறங்கிக் கொண்டிருக்கும் பொழுது அவர் கைகளில் நூற்றுக்கணக்கான கொசுக்கள் கடித்துக் கொண்டிருக்கிறது ஆனாலும் அவர் விழிக்கவில்லை உறங்கிக் கொண்டிருக்கிறார். உறக்கத்தில் தெரியாது, ஏன் தெரியாது? சாதாரணமாக நாம் கொசு கடிக்கும் பொழுது விழித்துக் கொள்கிறோம் ஆனால் ஆழ்நிலைத் தூக்கத்தில் அவர் எழுந்திருக்கவில்லை. ஏன்? எப்படி? என உறக்கத்தை பற்றி உறங்காமல் ஆய்வு செய்தபோது விழித்துக் கொண்டது இந்த கட்டுரை.

நாம் உறங்கும் போது மூன்று படிநிலைகளைக் கொண்டது என்றேன் ஆம் நிலை ஒன்று உறங்க தயாராகும் நிலை உறங்க தயாராகும் பொழுது உங்களது உடல் அசதியும் கண்கள் சொருகுவது கொட்டாவிகளும் உங்களை தூக்கத்தின் முதல் படிநிலைக்கு அழைத்துச் செல்கிறது. இப்பொழுது இந்த ஆரம்ப நிலையில் இருப்பவர் முதலில் நிற்பவராக இருந்தால் அவர் அமறுகிறார் பிறகு அமர்ந்தவர் என்றால் சாய்கிறார் சாய்ந்தவர்கள் படுத்து விடுகிறார்கள் படுத்தவர்கள் பின் உறங்கி விடுகிறார்கள் இன்னும் சற்று ஆழமாகப் பார்த்தால் உறங்கும் முன் முதலில் உறங்கப்போவது கண்கள்தான்.

ஆம் நாம் உறங்கும் பொழுது நமது கண்களே முதலாவதாக தனது இயக்கத்தை மெதுவாக இமைகளைத் தாழ்ந்து இரு இமைகளும் இணைந்து கண்களுக்கு ஓய்வு தருகிறது. அதன் பிறகு உறங்கச் செல்வது செவிகள் இதை எப்படி நாம் உணரலாம் என்றால் மில் வேலை பஞ்சாலையில் பணி செய்யும் ஒரு தொழிலாளி அந்த அதிக சத்தத்திலும் உறங்கிப் போவார் உறங்கும் பொழுது கண்கள் முதலாவதாக சோர்ந்து இமைகள் மூடிகிறது பிறகு அந்த சப்தம் அவரது காதுகளுக்குள் கேட்காது செவிகள் மூடுகின்றன ஆனால் இவ்விடத்தில் நினைவு கூறத்தக்கது முதலில் அவரது கண்கள் சொருகி கண்கள் மூடியிருக்கும் அதன்பிறகு அந்த சப்தங்கள் மெதுமெதுவாக ஓடும் ஒரு தொடர் வண்டியின் சத்தம் வெகுதூரம் சென்று நமது காதில் மௌனமாவது போலவே அந்த சப்தம் நின்றிருக்கும் அதன் பிறகுதான் அவர் தூங்கியிருப்பார்.

முதலில் கண்கள் உறங்கிய பின் செவிகள், அடுத்து செவிகளும் உறங்கியபின் உறங்குவது எதுவெனில் நமது தோல் பகுதிதான். இதைத்தான் முதலில் குறிப்பிட்டது போல அதிகப்படியான நேரம் பணி செய்த அந்த காவலரை பற்றிய செய்தி குறிப்பிடுகிறது. அதிகப்படியான நேரம் ஓய்வின்றி பணியாற்றியதால் கண்கள் முதலில் ஓய்வெடுத்து கொண்டிருக்கும் இரண்டாவதாக செவிகள் சப்தங்களை மௌனமாக்கி

உறங்கி ஓய்வு எடுத்திருக்கும் மூன்றாவதாக அவரது தோல் உணர்வு பகுதிகள் மெதுவாக உறங்கச் சென்றிருக்கும் அதனால்தான் அவரால் அவ்வளவு அதிக எண்ணிக்கையான கொசுக்கள் கடிக்கும் பொழுதும்   அறிந்திருக்கவில்லை, எழுந்திருக்கவில்லை இவ்வாறு உறக்கத்தில் மூன்று நிலைகள் உள்ளது.

விழிப்பின் மூன்று படிநிலைகள்

ஆழமாக தூங்கியவர் முதலில் எழும்போது கவனித்தோமானால் நாம் மேற்சொன்ன முதலாவதாக உறங்க சென்ற கண்கள் இரண்டாவதாக உறங்க சென்ற செவிகள் மூன்றாவதாக உறங்க சென்ற தோல் என்பது விழிப்பு நிலையில் எதிர் திசையில் பயணிக்கிறது. முதலில் விழித்துக் கொள்வது தோல் தான். நீங்கள் ஒரு நல்ல உறக்கத்தில் இருக்கும் பொழுது ஒரு கொசு கடித்தால் முதலில் தட்டி விடுவீர்கள் மீண்டும் மீண்டும் கடித்துக் கொண்டிருந்தாலோ தோல் பகுதியில் ஏதேனும் கடித்தாலோ நமக்கு பாதிப்புகள் ஏற்படும்போது நாம் எழுந்து விடுவோம். இதுவே   தோல் முதலில் விழித்துக்   கொள்வதற்கான ஒரு ஆதாரமாகும்.

இரண்டாவதாக விழித்துக் கொள்வது செவிகளாகும். ஆம் நீங்கள் உறங்கிக் கொண்டிருக்கும் பொழுது கொசுவைக் கூட நீங்கள் தட்டிவிட்டுக் கொண்டு அனிச்சை செயலால் உறங்கி விட முடியும். ஆனால் ஒரு பெரும்சப்தம் கேட்கிறது எனில் நீங்கள் ஒரு கட்டத்தில் கோபத்தோடு எரிச்சலோடு எழுந்து விடுவீர்கள் அந்த சப்தம் உங்களை உறங்க விடாமல் செய்யும் ஆதலால் இரண்டாவதாக விழிப்பது செவிகள் என தெளிவாகும்.

அதற்கு அடுத்தபடியாகத்தான் கண்கள் விழிக்கின்றன. ஆதலால் தான் தோல் விழித்த பிறகும் செவிகள் விழித்த பிறகும் நாம் கண்களை திறந்தாலும் கண்முன் காணும் காட்சிகள் தெளிவாகத் தெரியவில்லை. மங்கலாக இருந்து பிறகு மெதுவாக பனி விலகிய பின் சூரியன் தெரிவது போலவே காட்சிகள் தெரிகிறது இதிலிருந்து நாம் உணர்ந்து கொள்வது முதலில் உறங்கச் செல்லும் கண்கள் இரண்டாவதாக உறங்கச் சென்ற காதுகள் மூன்றாவதாக உறங்கச் சென்ற தோல் விழிப்படையச் செய்யும் பொழுது முதலாவதாக தோலும் இரண்டாவதாக காதுகளும் மூன்றாவதாக, இறுதியாகவே கண்கள் திறக்கின்றன. இந்த உறக்கம் என்பது நாம் உள்ளத்துக்கும் உடலுக்கும் ஆரோக்கியத்திற்கும் சிறந்தது என்பதை அன்போடு தெரிவித்துக் கொண்டு அடுத்த முறை உறங்கும் முன் விழித்துப் பாருங்கள் உறங்குவது யாரென்று!

நன்றி,
ஆசிரியர் நேசமுடன் ஈசு.

# பாரியன்பன் நாகராஜன் - கவிதைகள்

தேடினேன்... தேடினேன்...
எவ்வளவோ தேடியும்,
என் தேடலில்
தீராததாய் இருக்கிறது.
கவிதையின் தாகம்.

/
ஒரு முறை எதிர்த்ததை
மறு முறை ஆதரிக்கிறது
மனசு!

/
சிரிக்கும் பூக்களை
பார்த்து ரசிக்காமல் அவள்
பறித்துப் போகிறாள்.

/
முன்பொரு காதலால்
மரித்தேன்
பின்பொரு காதலால்
மோகக்காடு உயிர்த்தது
என்னில்.

/
இறைவன் யாரிடமும்
கேட்கவில்லை காணிக்கை.
உன் அத்துமீறல்களுக்கு
பிராயச்சித்தம்
தேட முயற்சிக்கிறாய்.

மறைக்க நினைத்த
துரோகம்சூழ் வன்மத்தின்
பட்டியல் முழுமையாய்
அவனிடத்தில்.

/
காதலென்றவொன்று
இல்லாமல் போயிருந்தால்
எப்போதோ காணாமல்
போயிருக்கும் பிரபஞ்சம்.

/
பகலெல்லாம் தொல்லைதரும்
காதல் ராட்சசி கனவிலும்
வந்தாளெனில் பேரின்பம்.

/
இனிய மாலைப்பொழுதில்
யாரைச் சாய்க்க
அவசர அவசரமாய்
ஒற்றை வானவில்லை
வளைத்திருக்கிறது ஆகாயம்.

/
எங்கு எப்படியிருந்தாலும்
அவளின் நினைவுகளை
மறக்காமல் அழைத்து வருகிறது
தூரத்தில் கசியும் அப்பாடல்.

/
பூட்டிய அறையினுள்
நுழையும் இராத்திரி நேர
இருளைப் போல்
என்னிதயத்துள் நுழைகிறாளவள்.

/
காற்று சருகினைப் புரட்டும்

வேளையில்;
என்னவளும் படுக்கையில்
புரண்டுப் படுத்திருக்கக்கூடும்.

/
எத்தனை முறை எவ்வளவு நாள்
தீட்டித்தீட்டி என் நட்பை
குறிபார்ப்பாய்
இன்று நண்பர்கள் தினத்திலாவது
என்னைக் காயமாக்காமல்
விட்டுவையேன்.

/
அப்படியென்ன
அவசர நிமிர்த்தமோ...?
பூவின்மேல்
அமர்ந்திருந்த பட்டாம்பூச்சி
சிறிதுநேரம்
என்தோள்மீதும்
அமர்ந்து போயிருக்கலாம்.

/
உங்களுக்கு
கொடுத்ததுபோக மீதமிருக்கும்
என்னை எனக்குத் தேவையென்று
எடுத்து வைக்கிறேன்.

/
யாரும் யாரையும்
நம்பியில்லாத போது
உன்னை மட்டுமே
முழுமையாய்
நம்பிக்கிடக்கிறோம்
நானும் என் கவிதைகளும்.

/
ஒவ்வொரு
கவிதைக்குப் பின்னாலும்
ஒரு நிகழ்விருப்பது போல்
என் ஒவ்வொரு
கவிதைகளுக்குப் பின்னாலும்
நீ மட்டுமே
இருந்து கொண்டிருக்கிறாய்.

/
கதிரரிவாளும்,
களைவெட்டியும் பிடித்த
அம்மாவின் கைகளின்
காய்ப்புகள்தான் எனது பட்டம்.
கடப்பாரையும்,
மண்வெட்டியும் பிடித்த
அப்பாவின் வியர்வை
வாசம்தான் எனது உத்தியோகம்.

/
பாலுக்கு காவலாய்
என்னை இருக்கப் பணிந்த
இறைவனே பூனையையும்
அனுப்பி வைக்கிறான்.

/
புறாவுக்கு தான்
அம்பை குறி வைத்தேன்.
கனி விழுந்ததற்கு அவனே காரணி.

/
காணும் விளம்பரத்தில்
பாதி பொய்
மீதி மெய்.

/
என்னைப்பற்றி
உனக்குத்தெரியும்.
உன்னைப்பற்றி

எனக்குத்தெரியும்.
நம்மைப்பற்றி ஊரறிய
காதல் செய்வோம் வா...!

/
யாரும் நம்ப மறுக்கிறார்கள்
அவர்களிடம் சொல்லிடு
நான்தான் உன் காதலனென்று!

/
காலையில்
தத்துவக்கவிதைகள்
மாலையில்
சமூகக்கவிதைகள்
இரவில் -
காதல் கவிதைகள்
என நீள்கிறது
என் கவிப்பயணம்.

/
எனக்குத்தெரியும்
என்னை உனக்குப்
பிடிக்காதென்று ...
உனக்குத்தெரியும்
உன்னை எனக்குப்
பிடிக்குமென்று...!

/
தூக்கம் வராத பட்சத்திலும்
கண்களை இறுக்கமாய்
மூடிக்கொள்கிறேன்.
உன்னை விடுவிக்க மனமின்றி...!

/
முள்ளை முள்ளால்
எடுப்பதுபோல்
காதலைக் காதலால்
இம்சைக்க வேண்டும்.
/
யாரும் பார்த்திடாத
மனதின் ரகசியக் குவியல்களை
மொத்தமாய்க் குப்புற
கவிழ்த்து விடுகின்றது
அவளின் கடைக்கண் பார்வை...!

/
உன்னைப் போலவே நகர்கிறது
பேசாமடந்தையாய்
உன் நிழலும்.

/
எனக்கு பதில்
தெரிந்ததை மட்டுமே
உனக்குக் கேள்வியாக்குகிறேன்.

/
பாசிடிவ் எதிர்ப்பார்த்தது
நெகடிவும்; நெகடிவ்
வரவேண்டியது பாஸிடிவும்
வந்தால் கலக்கமே.

/
மடித்த பிற்பாடு
தன்அகண்டவாய் மூடியது
விரித்த போர்வை.

/
ஒட்டுமொத்தமாய்
நிறங்களைச் சுமக்கும்
வண்ணத்துப் பூச்சிக்கு
வலிக்காமலா இருக்கும்
றெக்கைகள்...?

/

என்னுடையதை
ஏதோவோர் உரிமையில்
உனக்குக் கேட்கிறாய்.
எனக்கு வேண்டும் போது
எடுத்தியம்புமா?
உன் மனம்...!

/
உச்சிவெய்யில்
வெம்மைதாளா ஆதவன்
அருவியில் குதிக்கிறான்.

/
நான்
ஓவியனென்று தெரிந்தும்
நிறங்களைப் பரிசளிக்கிறார்கள்.

/
கற்சிலை யானைகள்
நடை பயின்றன
கலையா கனவில்.

/
ஆதவன்
ஆயிரம் துகள்களாய்
உடைந்து நொறுங்கியதும்
திசை மாறிய
மேகங்களெல்லாம்
திரளத் தொடங்கின.

/
உன் ஞாபங்களை அழிக்க முற்படும்
தருணங்களிலெல்லாம்...
நான் மொத்தமாய்ச் சிதைகிறேன்.

/
ஓவியத்தில்
வானத்தை அழித்ததும்
ஒவ்வொன்றாய் உதிர்கிறது
பறவையின் இறகுகள்.

/
ஆட்கள்
யாருமற்ற பொழுது
சுமையை முழுமையாய்
இறக்கி வைத்திருக்கிறது
சுமை தாக்கியில்
மரம் தன்நிழலை..!

–
கவிதைகள் ஆக்கம்,

பாரியன்பன் நாகராஜன்,
குடியாத்தம் - 632602
கைப்பேசி: 9443139353



# அகிலமெங்கும் சுழல்கிறது

உன் கைப்பற்றி...!!!!

ஆராய்ச்சிகளுக்கும்
விளங்கவில்லை
உனைப் பற்றி...!!!

இறைவன்
படைப்பின்
உன்னதமே...!!!!

ஈடு இணையில்லா
உயிர்
ஓவியமே...!!!!

உன்னில்
தோன்றியதே
அழகியல்...!!!!

ஊக்கமுற
பரவினாய்
இவ்வுலகில்...!!!!

எழில்கொஞ்சுது
உன்னால்
பேரண்டம்...!!!!

ஏராளம்
உன்னில் கண்ட
பிரமாண்டம்...!!!!

ஐம்பூதமும்
உனக்கிங்கு
துணை...!!!!

ஒன்றுமில்லை
உன்முன்னே
ஈடு இணை...!!!!

ஓர் வார்த்தையில்
விலக்கமுடியவில்லை
உன்னை...!!!!

–

ச. அருள் பிரசாத்,
B.com CMA MDA DTL
(GST practitioner)
சிராங்குடி



## 1. நிம்மதி

மெய் தேடலில் அடைந்திடுவாய்
நிம்மதியை..
மெய் அன்பில் உணர்ந்திடுவாய்
நிம்மதியை ..
உழைப்பின் களைப்பில் உறங்கிடுவாய்
நிம்மதியாய்...
அகிலமெங்கும் தேடினாலும்
அன்னைமடியே நிம்மதி........!!

## 2. சுயமிழக்காதே ...

புகலிடம் ஓடி சுயத்தை இழக்காதே..
பகல் கனவு கண்டு தூங்காதே ..
விழித்திரு பிறர் வீழ்த்தும் முன் ...
நளிந்தோர் செழித்திட  துயர்
துடைத்திடு....!!

## 3. ஓட்டை குடிசை வீட்டில் ஓராயிரம் சூரியன்..!!

கதிரவன் வந்து செல்ல ஒன்பது வாசல்
ஓட்டை குடிசை வீடு ....!!!

## 4. துவண்டுவிடாதே

வாழ்க்கை உன்னை ஓர் நாள்
தூற்றும் மறுநாள் உன்னை தேற்றும் ...
அந்த நாளும் வந்தே தீரும்
துவண்டுவிடாதே ..

ஏய் மனமே துவண்டுவிடாதே
கரும்பாறை இடுக்கிலும்
வண்ணப்பூக்கள் தோன்றும்...

கள்ளிசெடியிலும்
அழகிய வண்ணப்பூக்கள் தேன்
சிந்தும்..

துவண்டுவிடாதே ஏய் மனமே  ..

காயங்களை ஆற்று கவிதைகளில்
உன்னை தேற்று காலம் கனியும்
வாழ்வும் கனியமுதினை சிந்தும்....!!!

## 5. இன்னமும்

வாழ்ந்துகொண்டிருக்கிறேன்
நிலவொளியில்
உன் நினைவுகளின் துளியில்.....!!!

## 6. கண்களால் கவர்ந்து

கனியமுதினை பகிர்ந்து..
முத்தத்தில் முக்திபெற்று
முழுமை படுத்து..
கண்ணங்களில்
முத்தமிடு
ஆங்காங்கே கொஞ்சம் கடித்து வை...
கண்மூடித்தனமாய் கிடப்போம்
காலம் முழுவதும் காதலித்தே
கடப்போம்
நம்மை நாமே மறப்போம்...!!!
வானம்வரை சென்று நட்சத்திர பூ
பறிப்போம்...

–

ச. இராஜ்குமார்,
திருப்பத்தூர் மாவட்டம்.

# பெருமாள் முருகனின் "மாதொருபாகன்" வாசிப்பனுபவம்



இளவரசி
இளங்கோவன்

பெருமாள்முருகன் என்ற பெயரும் இலக்கிய கூட்ட பேச்சுகளில் மாதொருபாகன் என்ற பெயரையும் தவிர வேறேதும் அறியாமல் Storytel செயலியில் தீபிகா அர்சுனின் குரலில் மாதொருபாகனை செவிவழி வாசித்தேன். தீபிகா அர்சுன் மிகச்சிறப்பாக குரலில் ஏற்ற இறக்கங்களை காட்டி ஒப்பாரி பாடல்கள் முதல் அனைவரையும் கண் முன் கொண்டுவர துணைபுரிகிறது.

தொடங்கிய நிமிடம் முதல் முடிக்கும் வரை நிறுத்த முடியவில்லை.படு சுவாரசியமான கதை சொல்லும் பேராற்றல் எழுத்தாளர் பெருமாள் முருகனுக்கு.

"எத்தனை வருசக்கணக்காய் உடனிருந்தாலும் சில சந்தர்ப்பங்கள் அமையும்போதுதான் சில முகங்கள் தென்படுகின்றன. சந்தர்ப்பங்களே வாய்க்காமல் உள்ளே மூடிக் கிடக்கும் முகங்கள் எத்தனையோ. வெளிப்படாமலே அவை புதைந்துபோய் விடுகின்றன" போன்ற வசனங்கள் மனித மனதை படம்பிடித்து காட்டுகிறது.

பூவரசம்மரத்தடியில் தொடங்கும் கதை பூவரசம்மரத்தடியிலேயே முடிகிறது.

காளிக்கும், பொன்னாவுக்கும் திருமணமாகி பன்னிரெண்டு வருடங்களாகியும் குழந்தை இல்லை. அதற்காக அவர்கள் வேண்டாத சாமி இல்லை, செய்யாத பூசையில்லை; எதற்கும் பலன் கிட்டவில்லை. பொன்னா இடத்தில் வேறொருத்தியை நினைத்துப் பார்க்க முடியாத காளிக்கு, இரண்டாவது திருமணத்தில் விருப்பமில்லை. அவர்களுக்குள் நிறைவாக இருப்பினும், குழந்தை இல்லாததொரு குறையால் முழுமை பெறா வட்டமாய் தொங்கிக் கொண்டிருக்கும் அவர்களது வாழ்க்கைக்குத் தீர்வாய், பொன்னாவை பெருநோம்பிக்கு அனுப்பும் யோசனையை முன் வைக்கிறாள் பொன்னாவின் தாய் மற்றும் காளியின் தாய்.

அந்த யோசனையில் காளிக்குத் துளியும் உடன்பாடில்லை; காளியின் முடிவே பொன்னாவினுடையது. காளியின் சம்மதத்துடன் நடப்பதாக நினைத்துக் கொண்டு,

பெருநோம்பியின் போது யாரோ ஒருவருடன் கூடுவதற்கு வீட்டாரால் அழைத்துச் செல்லப்படுகிறாள் பொன்னா. இதையறிந்து காளி புலம்பவதுடன் கயிறையும் பூவரசம்மரத்தையும் காட்டி முடிவை வாசகர்களிடம் விட்டுவிட்டார் ஆசிரியர்.

ஓர் பெண் தன் விருப்பு வெறுப்புகளை பின்தள்ளி ஒர் உறுதியான முடிவை எடுக்க அவள் பெறும் பெரும் அடி, அவமானம், வசவு, வலி வேதனை விரக்தி எல்லாம் எப்படி ஏணிப்படி அமைக்கின்றன என்பதை பல்வேறு சம்பவங்களின் மூலம் வலுவாக முன்வைக்கிறார் இப்புதினத்தின் ஆசிரியர்.

வாழ்வில் யாதொரு பெருந்துன்பத்தை கண்டிராத வாசகர் வேண்டுமானால் குழந்தை இல்லா குறையை சொல்ல தொடர்ந்து ஒரே மாதிரியான சம்பவங்களை அடுக்கியிருப்பதால் சற்றே சலிப்பு தட்டுவதாக நினைக்கலாம்.

முடிவுக்கு தள்ளப்படும் முன் சொல்லப்படும் ஒவ்வொரு சம்பவமும் எடுக்கப்படும் முடிவுக்கு ஆதரவு தரும் மனநிலைக்கு வாசகனை அழைத்து செல்வதாகவே தோன்றுகிறது.

புத்தகத்தை முடித்தபின் தெரிந்து கொண்ட தகவல் பின்வருமாறு...

2010-ல் வெளிவந்த இந்நாவலை தடை செய்யக் கோரி பல்வேறு அமைப்புகள் 2015-ம் ஆண்டு வழக்கு தொடர்ந்தன. அதற்கு தடை விதிக்க மறுத்து 2016-ம் ஆண்டு தீர்ப்பளித்தது உயர்நீதிமன்றம். அதைத் தொடர்ந்து புதினத்தின் திருத்தப்பட்ட பதிப்பு 2016-ம் ஆண்டு வெளியாகிவுள்ளது. இவ்வளவு பிரச்சனைகளுக்கிடையிலும், சாகித்திய அகாடமியின் 2016-ம் ஆண்டுக்கான சிறந்த மொழியாக்கத்துக்கான விருதை ‘மாதொருபாகன்’ புதினத்தின் ஆங்கில பதிப்பான அனிருத்தன் வாசுதேவன் எழுதிய ஒன் பார்ட் வுமன்' பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

மாதொருபாகன் சர்ச்சை ஏதுமறியாமல் வாசிக்க தொடங்கிய எனக்கு தோன்றியவை: கிட்டத்தட்ட எண்பது வருடத்திற்கு முன்பு நடக்கும் கதை என்றாலும் இன்றும் பெரிதாக காட்சிகள் ஒன்றும் மாறிவிடவில்லை.

குறை ஆணிடமோ பெண்ணிடமோ பெண் தான் குறையை ஏற்றுகொள்ளவேண்டும். பரிகாரம் தேடவும் செய்யவும் வேண்டும்.

வேப்பிலை குடிப்பது, உயிரை பணயம் வைத்து மொட்டைக்கல் சுற்றுவது, எலுமிச்சம் பழ மடியேந்துதல் முதலியன.

பிரச்சனைகளிலிருந்து தப்பிக்க ஆண்மகனுக்கு தொண்டுப்பட்டி, நண்பனோடு புது புது இடத்தில் கள்ளுண்ணுதல், வீட்டிற்கு கூட வரமால் தனிமை படுத்திகொள்ளுதல், கோழி வளர்த்தல் என எத்தனையோ வாய்ப்புகளை குடும்பமும் சமூகம் கொடுக்கிறது. ஆனால் பெண்களுக்கு தனது துன்பங்களை வெளியிட கூட வாய்ப்பு தருவதில்லை.

மேலும் வீதிக்கொரு கருத்தரிப்பு மையமும், சினைமுட்டை சேகரிப்பு மையமும் வந்துவிட்ட இந்த அறிவியல் காலத்தில் நடக்கும் செயல் தான் அன்று அறிவியல் கண்டுபிடிக்கப்படாத அடிமைகாலத்தில் இறைவனின் பெயரால் சம்பிரதாயங்களாக வைத்து செய்யப்பட்டிருக்கிறது. புதிதாக ஒன்றுமில்லை அந்த காலகட்டத்தில் கதைக்களத்தில் பொன்னாவின் நிலையில் நிச்சயமாக அந்த நோன்பி சம்பிரதாயங்கள் இருந்திருக்கலாம் என்றே தோன்றுகிறது.

சுதந்திரமான நோன்பில் கூட பெண்களின் உணர்வு மதிக்கப்பட்டிருக்கிறதே. தாய் வழி சமூகம் அங்கே தலைகாட்டுவதாய் பட்டது. அந்த சம்பிரதாயங்கள் எல்லாம் ஒழிக்கப்பட்ட இன்றைய நாகரீக சமூகத்தில் தான் எத்தனை பாலியல் வன்கொடுமைகள், குழந்தை பாலியல் சிதைவுகள், கூட்டு வன்கொடுமைகள்.

அடுத்த பாகம் வாசிக்க ஆவலை ஏற்படுத்துகிறது இந்த புதினம்.

–

**இளவரசி இளங்கோவன்.**

# நிஜ கனவு...!?



உலகம் ஒரு நாள் தலை கீழானது....!
காடுகளின் ஆட்சியின் கீழ் வந்தன..
மனிதர்கள் வசிக்கும் பகுதிகள்....!?
வெட்டப்பட்ட மரத்தின் வேற்களின் ...
கால்களில் விழுந்து மன்னிப்பு கேட்டன....!?
ஆகாயம் தொட்ட கட்டிடங்கள்.....!?
ஆக்சிசன் இன்றி மருத்துவமனைகளில்
போராடுகின்றனர் மரத்தை வெட்டியவர்கள்....!?
பிறந்த மேனியாய் தலைகீழாய்...
தொங்குகிறார்கள் மனிதர்கள்...
கோழிகளின் சைக்கிளில்...!?
மனித விரல்களை சரம் கோர்த்து..
அர்ச்சனை நடக்கிறது பூக்களின் கோவில்களில்...!?
மனித ஈரல் குட்டிக்கு நல்லதென ..
வாங்கி செல்கின்றன ....
மனித சசாப்பு கடையில் ஆடுகள்....!?
மீன்கள் வலைவீசி பிடிக்கின்றன
மனித குளத்தில் மனித சுறாவை...!?
கொக்குகளின் நடவு வயலில்
மனிதர்களை பிடிக்க ....
விரிக்கப்பட்டிருக்கிறது ஊழல் வலைகள்....!?
பூச்செடிகளின் இறுதி ஊர்வலத்தில்.. தூவப்படுகின்றன மனிதர்களின் செவி மடல்கள்....!?
விலங்குநேயம் கொண்ட பூனைகள் சில..
வளர்க்கின்றன மனிதக் குட்டிகளை ..!?
கதியின்றி நடுத்தெருவில் உறவுகொள்ளும்....!?
மனிதர்களை கண்டுகொள்ளாமல்
பெருந்தன்மையாக கடந்து போகின்றன தெரு நாய்கள்....!?

- முனைவர் சா.சம்பத்
தேசிய பயிற்சியாளர்,
மன்னார்குடி.

# வாசமும் நேசமும்...

*
வகுப்பறை கூட்டுக்குள் ஆசிரியர்
சிறகுவிரித்துப் பறக்கின்றனர்
மாணவர்கள்.

*
ஏரி முழுதும்
நெருங்கிய உறவுகளாய்
குடியிருப்புகள்
அனாதையாய் சுற்றுகிறது
வீதியில் மழைநீர்.

*
பூக்களை நேசித்து
இறுக முத்தமிடும் வண்டுகள்
கூடுதல் இனிப்பாய் கனி.

*
பாவங்களை நேர்செய்ய
உண்டியல்கள்
பக்தர்களை வஞ்சிக்க பூசாரிகள்
கடவுளர்களைக் காக்க
இரும்புக்கதவுகள்.

*
பசித்த வயிற்றோடு
தள்ளாடி தடுமாறி செல்கிறது
வயதான ஏழைத் தெய்வம்.

*
சகுணக்காரனின் வண்டிமுன்
குறுக்கேச்சென்ற பூனை
விபத்துக்குள்ளாகி இறந்தது .

*
மதம்பிடித்தவர்களால் அழிகின்றன
வனங்கள்
ஊருக்குள் உலவுகிறது
உணவுதேடி அமைதியாய்
யானைகள்.

*
அப்பாக்கள் வாங்கித்தரும்
பொம்மைகள்
மிகவும் நெருங்கிப் பழகுகின்றன
மகள்களோடு.

*
அப்பாவை எதிர்ப்பார்த்து
ஏமாற்றத்தோடு உறங்கும்
குழந்தைக்கு
தெய்வங்களாலும் ஆறுதல்
சொல்லமுடிவதில்லை கனவில்.

*
தாய் ஆடு ஒன்று
பிறந்த கிடாய்கள் இரண்டு
சண்டைகள் மூன்று நான்கு ஐந்து
ஆறு....

*
அறுந்த செருப்பு
ஓய்வெடுக்கிறது
சாலையின் ஓரத்தில்.

*
வட்டங்கள் நேர்கோடுகளாகிற
பொழுது

சதுரங்கள் முக்கோணங்களாகலாம்
கூம்புகள் செவ்வகங்களாகலாம்.

*
யாருமற்ற ஒருவனுக்கு
நெருங்கிய உறவானது
தெருநாயும் அதன் குட்டிகளும்.

*
குடித்தால் குடும்பம் அழியும்
குடிக்காவிட்டால் அரசே அழியும்
யோசித்து முடிவெடு.

*
நில் கவனி
பக்கத்தில் மதுக்கடை
தூரத்தில் வீடு.

*
ஐந்தோ பத்தோ
குறைத்துத்தர மனமற்ற வியாபாரி
அழுகிப்போனப்பின் கூடைகூடையாய்
கொட்டுகிறார் குப்பைத்தொட்டியில்.

*
கருவில் உதைவாங்கிப்
பழகியவளுக்குத்
தெருவில் உதைவாங்கும்போது
கொஞ்சமும் வலிப்பதில்லை.

*
காற்றின் விரல்களால் தலைக்கோதி
உறங்கவைக்கிறாள் தாயொருத்தி
குழந்தை உறங்குகிது
அனாதையில்லத்தில்.

*
நேற்று கும்பிட்டு வீடுவந்தார்
இன்று வென்றிட்டுப் பதவிசென்றார்
கும்பிட்டேச் செல்லவேண்டும்
இனிநாம்.

*
அவள் போனபின்பும்
வாசமும் நேசமும் குறையவில்லை
வீடெங்கும்.

*
சிரித்தமுகத்தோடே எதிர்நிற்கிறாள்
சாமியறை புகைப்படத்தில்
எப்பொழுதும் அம்மா.

*
அழுக்கு உடைகளோடு பணிசெய்யும்
தினக்கூலிகளின் இதயம்
பழகுவதற்கு அவ்வளவு அழகு.

*
தன்னைப் பிடிக்கமுயலும்
குழந்தைகளொடு
வண்ணவண்ணமாய் வளைந்து
நெளிந்து
விளையாடி மகிழ்கின்றன
வண்ணத்துப்பூச்சிகள்.

*
மாறிக்கொண்டே இருக்கிறது
பணியிடம்
கூடிக்கொண்டே இருக்கிறது
விலைவாசி
நிதானத்துடன் குடிகாரக் கணவன்.

*
பாதரசம் தேய்ந்த கண்ணாடி

இடம்மாறிய நெற்றிக் குங்குமம்
தலையெழுத்தான வாழ்க்கை.

நான் ஒரு பொருட்டல்ல

விரையும் பயணங்களால்
ஓயாமல் நகர்கிறது சாலை
அங்கேயே நின்றிருக்கிறேன்
சலனங்கள் ஏதுமின்றி நான்
பறவைகள் இளைப்பாறி
எச்சமிடுகின்றன

உடலெங்கும் வழிகிறது
அதன் மிகையான கழித்தல்
பிறந்த தினமோ நினைவு தினமோ
அல்லது அடைமழையாகிலும்
வரவேண்டும்

கேவலங்கள் யாவற்றையும்
துடைத்தெறிய
சகித்தாகவேண்டும் அதுவரை
மண்டையைப் பிளக்கும் வெயிலும்
எலும்பைத் துளைக்கும் குளிரும்
அசைக்க இயல்வதில்லை
மாசடந்த காற்றில் கருகிப்போய்
நோய்த்தொற்றுவதில்லை நுரையீரல்
தேர்வுசெய்த இடத்தில்
துர்நாற்ற உடலோடு மக்கி
மண்ணாகிக் கொண்டிருக்கிறேன்

வாசப்பூக்களால் அலங்கரித்து
தியானம் செய்வதும்
சபதம் செய்வதும்
நன்றி செலுத்துவதும்
நலம் விசாரிப்பதும்
ஒப்புதல் கேட்பதுமாய்
நாடகங்கள் நிறைவேறுகின்றன

நீட்டிப்படுத்த என்முன்
சிலரின் முகமூடிகள் கழல்கின்றன
நம்பிக்கைகள் உடைகின்றன
நயவஞ்சகம் துள்ளிக்குதித்துக்
கன்றினைப்போல் விளையாடுகின்றது
குருதியின் கறைபடிந்த விரல்களில்
ஜொலிக்கிறது மோதிரங்களாய்
பாவங்கள்
எதிர்ப்பார்ப்புகள்
ஏமாற்றங்கள்
வேண்டுதல்கள்
வேதனைகள்
விரக்தி
நிம்மதி பெருமூச்சு
நான் வீழ்ந்ததிற்காய்
கடவுளுக்கு நன்றியென்று
தொடர்கிறது யாவற்றின்
கயமைப்பட்டியல்
என் விழிகள் மூடியிருக்கின்றன
ஆழ்ந்த உறக்கத்தில்
நீரூற்றி எழுப்புகின்றன

முன்னாளில் அறிந்தே யான்செய்த
பேரிடர்கள்
நிம்மதியற்றுச் சிதைகிறேன்
கடலலையின் சப்தங்கள்
இடியெனமோதி
உயிரைக் குடைகின்றன
என்மேல் உதிர்ந்திருக்கும்
வண்ணமலர்கள்
வாடத்துவங்கிவிட்டன
சற்றுநேரத்தில் சருகுகளாகித்
தூக்கி வீசப்படலாம்
நான் ஒருபொருட்டல்ல
இனியார்க்கும் அவற்றைப்போல!

## படரும் கனல்

கடவுளின் அடையாளத்தில்
எதிர்கொள்கிற சிலரிடம்
பாவமன்னிப்புகளும்
பேரருளும் நிறைந்திருப்பதில்லை
காக்கும் கரங்களில்
வற்றிவிட்டன வரங்கள்
கண்ணீரோடேத் திரும்புகின்றன

கடைசி நம்பிக்கையின் யாசகங்கள்
வெடித்துச்சிதறும் எரிதழலை
இதயத்தில் ஊற்றிப்
புன்னகைத்து இயங்குகின்றனர்
கவசமாகும் அர்ச்சுனர்கள்
எதிரில் ஓவியமாவதும்
முதுகில் கிறுக்கல்கள் புரிவதும்
வழக்கமான ஒன்றாகிட
வானம் விற்கும் காசில்
ஞானம்தேடி அலைகிறார்கள்
பேராசை புத்தர்கள்
வனமெங்கும் வாழ்வெங்கும்
சருகுகள் எரிந்து
படரும் கனல் தப்பிக்க
வழிதேடும் ஊர்வனவாய்
நிலையற்ற வாழ்வில்
அங்கும் இங்கும் அலைமோதும்
பிழைப்பைத் தேடிய பயணங்கள்
விடாதமழையில் எவ்வளவுநேரம்
நனையாமல் ஒதுங்கிநிற்க
துணிகையில் நிச்சயம் விலகலாம்
ஒருமேகம் இன்னொரு சோகம்.

–

**பொன். தெய்வா**
ஐவேலி
விழுப்புரம் மாவட்டம்.



# துளிப்பாக்கள்

கசக்கி எறிந்தச்சீட்டு
விழுந்துக் கிடக்கிறது
முதியோர் இல்லத்தில்

வாசிக்கும்போதெல்லாம்
நேசிக்கிறேன்
கவிதையோடு உன்னை

இடம் மாறிய இதயம்
ரகசியமாய் கேட்கிறது
பெயர் மாற்றம்

பக்குவமாய் அடியெடுத்து
வைக்கிறேன்
நடவு செய்த
கவிதை வயலில்

என் இரத்தத்தில்
முத்தமிடுகின்றன
உனது வார்த்தைகள்

சத்தமிடும் இதயத்தில்
மௌனமாய் புதைத்து விட்டேன்
உன்னை

சிதலமடைந்த சிலை
நிலைநாட்டுகிறது
பழமையின் பெருமை

இதோ வருகிறது
கவிதைப்பாட
ஆற்றில் புதுவெள்ளம்

வா மனிதா
ஞானம் பெறுக
விதைத்து விட்டது பறவை



பெ. விஜயலட்சுமி
காஞ்சிபுரம்
6380704001

# கலங்காது இரு மனமே...



கலங்காது இரு மனமே கலங்காது இரு..
அன்பு என்னும் நிலைப்பாடுதான் உன்னை தனிமை படுத்தும்..
ஏன் என்றால், தங்கதுடன் செம்பு கலந்தால் தான் மதிப்பு என்பதை அறியாமல் போனதால்....

இங்கு நிதர்சனம் யாவும் வெற்று காகிதங்கள் என்பதை மறவாதே..
இடம் தகுந்தார் போல் உன் நிலை மாற ஆயுத்தம்மாகு.

கலங்காது இரு மனமே கலங்காது இரு...
பிறர் நிலை கண்டு நீ இரக்கம் கொண்டாய் உனக்கு இச்சமூகம் கொடுக்கும் பெயர் மூடன் என்பதை மறவாதே...

மன மாசரியங்களை கொன்று நீயும் அனைத்தையும் சகித்துக்கொண்டு புறம் தள்ள ஆயத்தம்மாகு...

கலங்காது இரு மனமே கலங்காது இரு..
பசி என்று இரந்து உன்னிடம் நிற்பவர்களை, உன் கைகால்கள் நன்றாக தானே உள்ளது என்று கேள்வி கேட்க பழகி கொள்... காரணமானவர்கள் தரும் பிச்சைக்கு உன் வாக்குரிமையை விற்றதை மறவாதே...

ஊழல் நிறைந்த இந்த சமூகத்தில் பிறப்பு மற்றும் அல்ல இறப்பு சான்றுக்கும் பணம் தரவேண்டும் ஆயுத்தம்மாகு...

கலங்காது இரு மனமே கலங்காது இரு..
நன்னிலம் போற்றும் பெண்மை.. பெண்ணியம் என்ற பெயரில் தன் கண்ணியத்தை

இழக்கும். ஆணுக்கு பெண் அனைத்திலும் நிகர் என்று அவனை சீர்செய்யும் பொருட்டு?? அவன் செய்யும் கீழ்த்தரமான செயல்களை தானும் செய்வேன் என்று பிதற்றும் மறவாதே...

பாரதி கண்ட புதுமை பெண் அல்லவா அவள்???

நீ திருத்த முற்படும் போது உன்னை ஆணாதிக்கக் வர்கம் என்று புறம் பேசும் அவளை எதிர்கொள்ள ஆயுத்தம்மாகு..

ஊடகம் என்னும் மாயதிரையெல்லாம் தன் நிலை அறிந்து சமூக அக்கரையில் வளரும் சமூகத்திற்கு தரும் அற்பணிப்பு வருங்கால சமூகத்தின் அவலனில்லையை மேம்படுத்தும் என்பதை மறவாதே...

நம் கலாச்சாரத்தின் அடினாளதின் அச்சாணியை ஊடகம் என்னும் கோடாரி வேர் அறுபதை மறவாதே...

இன்றைய வளர் இளம் சமூகம் ஊடகம் என்னும் மோகத்தில் மூழ்கி தன் இளமையை... குழந்தைகள் தன் குழைந்தை தன்மையை இழந்து நிற்பதை மறவாதே...

எடுத்து சொல்லும் உன்னை கடந்த கால தலைமுறை என்று கடந்து செல்லும் இந்த சமூகத்தை எதிர்கொள்ள ஆய்த்தம்மாகு...

கலங்காது இரு மனமே கலங்காது இரு...
காதல் என்ற பெயரில் நடக்கும் காம களியாடங்களை... காரணம் காரியதோடு ஊடகம் துணை கொண்டு உலகறிய செய்யும் மாக்கள் உண்டு என்பதை மறவாதே...

புனிதமான தாம்பத்திய பந்தத்தை ஊர் அறிய செய்து பணம் பார்க்கும் அறிவீனங்கள் உண்டு என்பதை மறவாதே...

சமூக போராளி, நீதிக்காக பிறந்த நீதிமான் என்று தன் சுயம் பாராமல் பிறர் வீட்டு அடுபரை விசியங்களை தேடும் நீதிமான்கள் உண்டு என்பதை மறவாதே....

களை எடுக்க நினைக்கும் உன்னை கலைநயமற்றவன் என்று எல்லி நகையாடும் இந்த களைநயம்மிக்கவர்களை எதிர்கொள்ள ஆய்யுத்தம்மாகு...

நிதர்சன காதலை உதாசினப்படுத்தி... அகத்திணை ஏற்காமல் புறத்தினை விரும்பி ஏற்றுக் பின் வாழ்வை இழக்கும் இந்த வளர் பெண்களை எண்ணி பரிதாப பட ஆயுத்தம்மாகு....

கலங்காது இரு மனமே கலங்காது இரு...
நீதி கிலோ என்ன விலை என்று பணம் உள்ளவன் வாங்கும் நிலை உண்டு என்பதை மறவாதே...

பணம் பதவி படைத்தவன் எதையும் செய்யும் முனைப்பு உள்ளவன் என்பதை உணர்ந்து அவனை எதிர்கொள்ள ஆயுத்தம்மாகு...

பெண்களை தன் வீட்டு தெய்வங்களாக மதித்த ஆண்கள் இன்று இளம் சிசுவை கூட சிதைக்கும் சீர்கெட்ட மாந்தர்கள்ளாக உள்ளனர் என்பதை மறவாதே....

உள்உணர்வை கொண்டு இவற்றை எதிர்க்க ஆயுதம்மாகு

கலங்காது இரு மனமே கலங்காது இரு...
நம் வாழ்வியல், கலாச்சாரம், பண்பாடு நம் கண்முன்னே காணாமல் போகும் என்பதை மறவாது... காக்கவும் திராணி இல்லாமல் வளர்சமூகதின் எதிர்காலத்தை எதிர்கொள்ள ஆயுத்தம்மாகி கலங்காது இரு மனமே கலங்காது இரு...

–
வருத்தத்துடன்
கவிபாரதி. சதிஷ்,
விருதை.

---



# என் இளமை எங்கே?

நான் அண்டவெளியில் வீசப்பட்ட
அழகான பறவை.
என் இறக்கைகள் உடைக்கப்பட்டு
உடல் நனையும் குருதியுடன்
ஊண் எதுவுமின்றி
ஊனப்பறவையாய்
ஒதுங்கித் தவிக்கின்றேன்.
எண்ணங்கள் எத்தனை?
ஏக்கங்கள் எத்தனை?
சொல்லவும் முடியாமல்
சொந்த இடமும் சேராமல்,
சோர்வாகிப் போகின்றேன்.
நான் பிறந்த நேரம்
எனை யாரென நான் அறியுமுன்னே
ஆட்டம் பாட்டமாய்
ஆரவாரமாய்,
சுற்றிவந்தேன் சுதந்திர வானில்
இன்று மண் மேட்டு நிலத்தில்
மனம் நொந்து முத்தமிடும்
என் கண்ணீர்த் துளிகள்.
தொலைந்த இளமை எங்கே என
தொடர்ந்து தேடுகிறது.

–

சாலையூர் பொன்னந்தி,
இலங்கை.

## இருபது வயதில் இருப்பவர்கள் தம்பியாகவும்

இருபத்தி ஐந்து வயதில்
இருப்பவர்கள் தங்கையாகவும்
முப்பது வயதில்
இருப்பவர்கள் அக்காவாகவும்
முப்பத்தி ஐந்து வயதில்
இருப்பவர்கள் அண்ணன்களாகவும்
ஐம்பது வயதை கடந்த பெண்கள்
அம்மாக்களாகவும்,
அறுபது வயதை கடந்த
பெரியவர்கள் அப்பாவாகவும்
தெரிகிறார்கள்...
சிறுவயதில் கோவில் திருவிழா
ஒன்றில் தொலைந்து குடும்பத்தை
தொலைத்த
நகரத்தில் வசிக்கும் இளைஞனுக்கு!

**

## பண்டிகை நாட்களில்

புத்தாடைகள் வாங்கி வரும்
போதெல்லாம், எனக்கெதற்கு
வயதான காலத்தில் என
விலகிப்போகிறாள்,
வெளியூர்களுக்கு சுற்றுலா செல்லும்
நாளில் உடன் வர
அழைக்கும் தருணங்களிலெல்லாம்
நீங்க
போயிட்டு வாங்க என ஒரு
புன்னகையோடு மறுத்து விடுகிறாள்,
ஊரில் திருவிழா நடக்கும்
நாட்களில் கோவிலுக்கு செல்லாமல்
சாமி ஊர்வலம்
வீட்டைக் கடக்கும் போது
பிரார்த்தனை செய்து கொள்கிறாள்,
ஏன் பாட்டி உங்களுக்கு ஆசைகள்
எதுவுமில்லையா என பேரன் கேட்ட
ஓர் நாளில்,
பல வருடங்களுக்கு முன்பாக
இறந்த
தாத்தாவின் அருகில் புதைத்திட
வேண்டுமென்று சொல்கிறாள்
கலங்கிய கண்களோடு!

***

## இரவைப் பற்றிய கவிதையொன்றை

பகலிலும்
பகலைப் பற்றிய
கவிதையொன்றை இரவிலும்
எழுதிய பின்னொரு நாளில்
புன்னகைப் பற்றி
எழுதிக்கொண்டிருக்கிறேன்...
தீராத கண்ணீரோடு!

***

## ஒரு நாளைக்கு

ஒரு முறையாவது அம்மாவிடம்
பேசவேண்டும்,
இரண்டு நாட்களுக்கு
ஒரு முறையாவது
சகோதரிகளிடம் பேசிட வேண்டும்,
வாரத்திற்கு
ஒரு முறையாவது சகோதரர்களிடம்
பேசிட வேண்டும்,
மாதத்திற்கு

ஒரு முறையாவது
பால்ய நண்பர்களிடம் பேசிட
வேண்டும்,
பேசுவதில் தான் பேசப்படுகிறது...
நமக்கான வாழ்க்கை!

***

## இப்போது என்னை கண்டதும்

மௌனமாய் கடந்து போகும்
நாய்க்குட்டி
முன்பொரு நாள் என்னை
துரத்தியிருந்தது ,
இப்போது என்னைப் பார்த்ததும்
புன்னகையோடு கடந்து போகும்
குழந்தை முன்பொருநாள்
நான் அருகில் சென்றபோது
அழுதுகொண்டே ஓடியிருந்தது ,
இப்போது என்னை கண்டதும்
அன்பொழுக பேசிடும்
பெயர் தெரியா மூதாட்டி
முன்பொருநாள் சிறுகோபமொன்றில்
ஆயிரமாயிரம் சாபங்களை
வீசி சென்றிருந்தாள்,
உங்கள் விருப்பம் போல்
எத்தனை ஆண்டுகள்
வேண்டுமானாலும்
தங்கிக் கொள்ளுங்கள்
எங்கள் வீட்டிலேயே என்கிறார்கள்
முன்பொரு நாள்
வீட்டைக்காலி செய்யச்சொல்லி
சண்டையிட்டவர்கள்,
கண்ணீர் கவிதைகளை
மட்டுமே
எழுதிக் கொண்டிருந்த நான்
இப்போது
புன்னகையைப் பற்றி
எழுதிக் கொண்டிருக்கிறேன் ,
மாற்றம் ஒன்று தான் தடுமாற்றமின்றி
அழைத்துச்செல்கிறது...
இந்த வாழ்க்கையை!

**

## எனக்கே புரியாத ஒன்றை

உனக்கு புரியுமென
நம்புகிறேன்
எனக்கே தெரியாத ஒன்றை
உனக்கு தெரியுமென
உறுதியாகயிருக்கிறேன்...
எனக்கு எட்டாத ஒன்றை
உனக்கு எட்டுமென
உற்சாகப்படுத்துகிறேன்...
என்னால் பேசமுடியாத ஒன்றை
உன்னால் பேச முடியுமென
துணிந்து நிற்கிறேன்...
நீ என்பது
நானாகிப்போவதில்லையென்பது
அறிந்தும் அறியாதது போல்
கடக்கிறேன்...
வற்றிப்போன ஞானப்பெருங்கடலை!

**

## மழைக்காய் காத்திருக்கின்றன

மரங்கள்,
கனிகளுக்காய் காத்திருக்கின்றன
பறவைகள்,

பூக்களுக்காய்
காத்திருக்கின்றன
வண்ணத்துப்பூச்சிகள்,
இரவுக்காய்
காத்திருக்கின்றன
நட்சத்திரங்கள்,
மாணவர்களின் வருகைக்காக
காத்திருக்கின்றன
பள்ளிக்கூடங்கள்,
காத்திருத்தல்
எல்லாம் சுகமாய் இருப்பதில்லை...
தன் பசி தீர்ப்பதற்காய் பால்
வாங்கச் சென்ற அம்மாவிற்காய்
காத்திருக்கும்
குழந்தைக்காய்
அழுதுக்கொண்டிருக்கும்
இக்கவிதையைப் போல்!

**

## முதல் அலையில்

ஒரு வேளை
பட்டினி,
இரண்டாம் அலையில்
இரண்டு வேளை பட்டினி,
மூன்றாம் அலையில்
என்னவாகுமோ என
புலம்பிக்கொண்டிருக்கிறாள்
சாலையோரத்தில் காய்கறிகள்
விற்றுக்கொண்டிருக்கும் சரசுப்பாட்டி,
வாழ்வதற்கும் மறைவதற்குமான
இடைவெளியில்,
எரிக்கும் நெருப்பாகிறது அக்கேள்வி
சேமிப்புள்ளவர்கள் சேமித்து
வைத்துக்கொள்கிறார்கள் தங்கள்
உயிரை,
ஏதுமற்றவர்கள் எதிர்பார்ப்பற்று
வீழ்கிறார்கள்,
எல்லாரும் சமமென்ற தேசத்தில்
மரணம் மட்டும் வறுமைக்குள்ளே
அதிகப் பூத்துக்குலுங்குகிறது...
எவ்வித வாசமுமில்லாமல்!

–

மு.முபாரக்,
+91 8072600090



ஒரு
கவிதைத்
தொகுப்பு முழுக்க
பொய்.

பொய்யை
ரசித்துக்
கை தட்டுகிறார்கள்
கவியரங்கில்.

பொய் பேசாத
காந்திக்கு   கவிதை
பிடிக்குமா.

கவிஞனின் மகன்
பொய் பேசுவதில்
ஆச்சரியம் ஒன்றுமில்லை.

கவிதைத் தொகுப்பு
வாசிக்க வாசிக்க
அருமையாய் இருந்தது
பொய்.

வெளியிட்ட நாளிலேயே
விற்றுத் தீர்ந்தது
பொய்த் தொகுப்பு

பொய் எழுதக் கூட
யோசிக்க வேண்டும்.

பள்ளத்தைக் கண்டுபிடித்தத
மழை
குளத்திடம் அகப்பட்டுக்
கொண்டது.

பள்ளத்தில் விழுந்து
பயந்தோடிய மழையை
வாரியணைத்து ஆசுவாசப்
படுத்தியது குளம்

மழையால் பாதித்தஇடங்களைப்
பார்வையிட இரவில் வந்தது
நிலா.

பூமி குடித்தது போக
மீதம் குளத்தில்.

தகரக் கொட்டகையைக்
கண்டால் தாளமிடத்
தவறியதில்லை மழை.

மழைக்குப் பிடித்த
இசைக் கருவி
தகரம்.

இலை சொட்டும்
மழைச் சத்தம்
இன்னுமிருக்கும்
மழை விட்டும்.

மழைத்தடி கொண்டு
பூமியை அளக்கிறது
மழை.



– ஆனந்தன்,
திருப்பூர்.

# குழந்தைப் பாடல்

அன்புக் குழந்தாய் வா வா
இணையவழி கல்வி வேண்டாம் வா

இருவழிக் கல்வி பெறுவோம் வா
ஈடேதும் அதற்கில்லை என்போம் வா

உண்மை என்றும் பேசுவோம் வா
ஊரார் புகழ வாழ்வோம் வா

எண்ணும், எழுத்தும் கற்போம் வா
ஏனென்று கேள்விக் கேட்போம் வா

ஐயம் தெளிவுப் பெறுவோம் வா
ஒற்றுமையாய் கூடி இருப்போம் வா

ஓடியாடி விளையாடுவோம் வா
ஔவை மொழியைக் கேட்போம் வா

--

மு.ஜெரோஷா,
திருப்பூர்

# நவீனமயமானோம்!!
# மாயமானோம்!!

அந்த பாரம்பரிய வீட்டை
கலைப்பதாக சொன்னார்கள் !
தாழ்வாரத்து கூரைகளில் இறங்கி
தூரத்து தொட்டிச்செடியைத்தான்
கண்டோம்,
மண்வாசனை இல்லையென்றபோதும்
இரவலிருக்கப் பார்த்து மோதி
வீழ்கையில் உணர்கிறோம்
அடைத்து சாத்தப்பட்ட சாளரக்
கண்ணாடிகளின் வீரியத்தை!

அன்றெல்லாம் வீட்டில் வைத்து
அழகுபார்த்தவர்கள், இன்று
ஓரிரு பருக்கைக்காய் நவீன
கட்டிடங்களில் உலாவருகையில்
விரட்டியே மகிழ்கின்றனர்.!

தெருக்குழாய்களில் அனாமத்தாய்
வீழும் எஞ்சிய ஓரிரு துளிநீரிலும்
வெண்மைநிறக் கலவைகள் !!!

கிராமியப் பாடகராய் வலம்
வந்தோம்.
கம்மாய்களும் கூவல்களும்,
அகழியும்
குமிழியும், வாளிகளும்
நீராழிகளும், வரவேற்று
குதூகலித்தன.

ஆண்டுகள் பதின்மூன்றில்
அனைவர் மனதிலும் நெருக்கம்
ஆனோம்..

நவீனமயமாக்கலும்,
அளவற்ற அறிவியலின் பயனும்,
கண்கட்டி வித்தைகாட்ட,
மாசடையும் காற்றுடன்
நாங்களும் நவீனமயமானோம்
ஆம், மாயமானோம் !

கைபேசி கோபுரங்களில்
மட்டும் இன்னமும் கேட்கிறது,
கதிர்வீச்சில்
கருசிதைந்து
இறந்துபோன எங்களின ஓலம்..!
சுமைதாங்கிக் கல்
வைத்தாலின்னுமொரு
யுகம்வேண்டும்..!

தெரிந்தே குத்திய ஈட்டிக்காய்
அனுதாபமேனோ?
எதற்கிந்த சிட்டுக்குருவி தினமோ? !!!

–

கவிமலர் த. சரண்யா,
கொழிஞ்சாம்பாறை,
பாலக்காடு மாவட்டம்.
கேரளா.



# என் பிழைத்துப் போன இருட்டான நாட்கள்

வாழ்வில் பிறக்கும் நாட்கள் எல்லாம்
வைரம் மின்னும் நாட்கள் அல்ல....!

பிறப்பிலிருந்து இறப்பு வரை
பலருக்கு சிறப்பு நாட்கள்...!

பிறந்த துயரம் மறந்திடவே பலருக்கு
மன்றாடி கலங்கும் கறுப்பு நாட்கள்...

சத்தியமாக சொல்லிவிடுகிறேன்...
என் சந்தோசங்கள் தோன்றி
எதிர்பார்த்து காத்திருந்த கருவறை
நாட்கள்....

தொப்புல் கொடி உறவாலும்
அம்மை அவள் உயிராலும் ஒருவித
சுகம் கண்ட முந்நூறு நாட்கள்....!

பிறப்பை நோக்கி நகர்ந்த நாட்கள்....
பிறப்பில் அம்மை அழுத நாட்கள்...
அப்பன் என்னை தழுவிய நாட்கள்....
தொட்டு தொட்டிலில் போட்ட
நாட்கள்...

பெயரில் உலகை ஆள வேண்டி..
தேடிப் பெயர் வைத்த நாட்கள்...
தேனும் குங்கும்ப்பூவும் திகட்டும்
அளவிற்கு தின்ற நாட்கள்....

தினம் என்னை பார்க்க அப்பன் ஓடி
வந்த நாட்கள்....

எனக்கு துணை வேண்டுமென்று
புன்னகையில் புரிதல் நாட்கள்....

அழகு நிறைந்து அன்பைக்கொட்டி
அடி எடுத்து வைத்த நாட்கள்...
ஐந்து வயது கடந்த போது அப்பன்
அம்மையை பிரிந்த நாட்கள் .....
பள்ளி பருவம் முடிந்த பின்பு
இளமை காதலில் கரைந்த நாட்கள்....
அடுத்த நிலையை தொடக்கி வைத்த
கல்லூரி காதலில் திளைத்த நாட்கள்...

நட்பில் மூழ்கி வளர்ந்த நாட்கள்..
கலவும் கற்று தேர்ந்த நாட்கள்....

காலம் போக...வயது போக
அனைத்தும் பழகி போன நாட்கள்....

யாரை நம்பி யாரை இழக்க
அனைத்தும் தூரம் ஆன நாட்கள்...

சேர்த்த சொத்து கரைந்த நாட்கள்...
சொத்தின் சுழியில் உறவுகள் பிரிந்த
நாட்கள்....

யாவும் கடந்து போன போதும்
வாழ்க்கை துணை இணைந்த
நாட்கள்....

வாழ்ந்து கெட்ட நாட்கள் எல்லாம்
துணையின் மடியில் மொழிந்த
நாட்கள்....

எல்லாம் அவளே என்ற நாட்கள்...
என் பெற்றோர் இறந்த நாட்கள்....
எனக்கோர் உயிர் தளிர்த்த நாட்கள்...
பெற்றோரே என மகிழ்ந்த நாட்கள்...

காலத்தின் ஓட்டத்திலே நான்
ஏற்றதெல்லாம் இன்ப நாட்கள்..

கவலையிலும்,
துயரத்திலும்
நான் பிழைத்துபோன அந்த
இருட்டான நாட்கள்...

பேணிகாத்து பிறந்த முந்நூறு
நாட்கள்..
பள்ளி சென்ற ஒன்னறை
இலட்சநாட்கள்...
முடித்து அகன்ற இரண்டறை இலட்ச
நாட்கள்...
கல்லூரியில் மின்னிய ஆயிரம்
நாட்கள்...
காலத்தின் ஓட்டத்தில்
விதியின் முடிவில் என் பிழைத்துப்
போன இருட்டான நாட்கள்.....

காலம் வழியது..
காலம் வலியது...
காலம் மருந்தது..
காலம் சிறந்தது...

–

கார்கவி,
Er. Prof.
சே.கார்த்திகேயன், ME.,
நாகப்பட்டினம்,
*9710121040*
Karkavikavithaigal@gmail.com

**பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள்
பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்.**

# திறவுகோல்

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த கட்டுரைகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் கொண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

---

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

---

மன்னார்குடி படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம் பெற செய்ய
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

---

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைப்பேசிக்கே மின்னிதழை பெற
பகிரி: +91 8220567322

---

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய
டணாணாணீ://ட்ச்டிணணாடச்ணுாடுச்டூ.ட்ச்ணணச்டி.டிண

---

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

கி. மாணிக்கம்
திறவுகோல் ஆசிரியர் குழு

## 2015ம் ஆண்டு முதல்
## மன்னையின் மைந்தர்கள் குழுவின் பணிகள் ....

காவிரி, உரிமை மீட்பு குழுவின் பனங்குடி, இந்திய அரசின் பெட்ரோலிய ஆலை முற்றுகை போராட்டத்தில் மன்னையின் மைந்தர்கள் பிற போராட்ட குழுவுடன்

சீமை கருவேல மரம் அழிப்பு மன்னை தொடர்வண்டி நிலையம் அருகில்

இரத்த தான முகாம்

கடலூர் வெள்ள நிவாரண பணிகள்

பூமியை காப்போம் கருத்தரங்கம் (தேசிய மேல்நிலைப் பள்ளி - மன்னார்குடி)

நம்மாழ்வார் பூங்கா அமைத்தல் (தொடர் வண்டி நிலையம் அருகில்).

நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு.

தோழர் கு. முத்துகுமார் 7ம் ஆண்டு நினைவு நாள்

உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்கள் பங்குபெற்ற நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம்.

தொடர்வண்டி நிலைய கருவேல மரம் அகற்றல் மற்றும் சமநிலைப்படுத்துதல்

உலக சுற்றுசூழல் தின அன்று தொடர்வண்டி நிலையத்தில் இருக்கும் கருவை மரங்களை அகற்றும் பணி நடைபெற்றது.

ஜி. ஆர். தோப்பு சீமை கருவேல மரங்கள் அழிப்பு.

மாணாக்கர்களுக்கு கையேடு, எழுதுகோல் வழங்கிய மன்னையின் மைந்தர்கள் குழு

நம்மாழ்வார் ஏரியில் நடைபெற்ற பணிகள்.

சீமை கருவேல மரங்கள் அழிப்பிற்கு பின் தூர்வாரி மீட்டெடுத்தல்

பழைய சுவர்களில் வெள்ளையடித்தல்.

நிலத்தடி நீர் அதிகரிக்க வேண்டி செய்த பணி.

குழாய் பதிக்கும் பணி.

விதை விதைப்பு, மரக்கன்றுகள் நடப்பு.

திறவுகோல் மின்னிதழ் வெளியீடு.

## எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்

மன்னையின் மைந்தர்கள்

மண்ணின் மாற்றத்தை நோக்கி

**+91 8220567322**

http://maintharkal.mannai.in

MannaiyinMaintharkal

ThiravukolMagazine